# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2353/73 - 2023 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2023.10.13

2353/73 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: කිප්‍රාලේ/1/8/3/59 අත්.
காணி அமைச்சின் தொடர் இல.: 4-3/11/2017/UDA/306.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஹீன் எல போக்குவரத்துப்பாதையின் விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக எடுக்கப்படுகின்றது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் (கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கோத்தமீபுர பிரிவு) பொரல்லை கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அதிபதியினால் வரையப்பட்ட கடத்திரல் வரைபட இல. 520618 மற்றும் 2023.07.31 ஆந் திகதியைக் கொண்டமைந்துள்ள கடத்திரல் வரைபடத்தில் இல. 1 மற்றும் 2 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் விஸ்தீரணம் 0.0593 ஹெக்டயார்களாகும். அக் காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**துண்டு இல. 01**
காணியின் பெயர்: வரிப்பண இல. 228, லேக் டிறைவ்; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0509 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**
காணியின் பெயர்: வரிப்பண இல. 228, லேக் டிறைவ்; விபரம்: தரிசு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0084 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00


1A - G 40532 — 24 (2023/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மணிக்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் என் முன்னிலையில் வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரியந்த திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய,
நாராஹேன்பிட்டி.
2023, ஒற்றோபர் 09.

EOG 10 - 0163

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: NYGM/LAN/7/50.
காணி அமைச்சின் தொடர் இல.: 4-3/9/2014/WS/227.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் நியாகம பிரதேச செயலகப் பிரிவில் உதுரு பிடிகல கிராமத்தில் இ.கி.தி. 592 எனும் திட்டப்படத்தின் மேலதிக இலக்கம் 35 இன் பத்திர இலக்கம் 36 இல் சுட்டிக் காட்டப் பட்டுள்ள கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

**துண்டு இல. 1350**

காணியின் பெயர்: ஹல்கஹஓவிட்ட; காணியின் தற்போதைய பயன்பாடு: அரசு; உரிமை கோருவோர்: டபிள்யூ. டி. எம். பிரதீப் குமார, தொடுபல வீதி, பிடிகல; விஸ்தீரணம்: 0.0089 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நியாகம பிரதேச செயலகத்தில் என் முன்னிலையில் வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஜீ. எஸ். சஜீவனீ,
பிரதேச செயலாளர்,
நியாகம.

பிரதேச செயலகம்,
நியாகம.
2023, ஒற்றோபர் 11.

EOG 10 - 0164

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.